**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**IDOP. 33/2025**

**நாள்.07.02.2026**

ம.சா.1 திரு.அந்தோணி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். என் உடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து மொத்தம் 3 நபர்கள். எனது அக்கா பெயர் லிடில் தெரஸ், எனது தங்கை பெயர் லிமாரோஸ். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்த நிலம் உள்ளதா என்றால் அப்பா பெயரில் உள்ளது. வேறு என்ன வேலை எனக்குத் தெரியும் என்றால் கூலி வேலைக்கு செல்வேன். கொத்தனார் வேலைக்கு போவேன் என்றால் கொத்தனாருக்கு உதவியாளராக போவேன். கொத்தனார் வேலையும் தெரியும். என் அப்பா பெயரில் உள்ள நிலத்தில் நானும் அப்பாவும் விவசாயம் செய்து வருகிறோம். நான் கிறிஸ்துவ மதத்தை சேர்ந்த ஜாதி உடையார் என்றால் சரிதான். என் மனைவி கிறிஸ்துவ மதத்தை சேர்ந்த ஜாதி நாடார் என்றால் சரிதான். நான் என் மனைவியை, எங்களை விட தாழ்ந்த ஜாதியை சேர்ந்தவர் என்று திட்டியுள்ளேன் என்றால் இல்லை. திருமணத்தின்போது எனக்கு என்ன நகைகள் போட்டார்கள் என்றால் எனக்கு இரண்டு பவுன் கைசெயின் போட்டார்கள். எனது மனைவிக்கு என்ன நகை போட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது, நான் கேட்கவும் இல்லை. எனது மனைவிக்கு நாங்கள் தாலியுடன் சேர்த்து 5 பவுன் நகை போட்டோம்.

எதிர்மனுதாரர் தரப்பில் பொருளாதார நெருக்கடியில் இருந்ததால், நான் பெரிதாக சீர்வரிசை பொருட்கள் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை என



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:34:28 +0530

நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வீட்டு உபயோகப்பொருட்கள் சிறிது கொடுத்தார்கள். ப்ரிட்ஜ், க்ரைண்டர், மரக்கட்டில், மரப்பீரோ மற்றும் அந்த ஊர் வழக்கப்படி மற்ற சீர்வரிசை பொருட்களை கொடுத்தார்கள் என்றால் அவர்கள் கொண்டுவந்தார்கள், நான் அதை பார்க்கவில்லை. நாங்கள் கேட்டதை விட குறைவான நகைகளை போட்டதால், எதிர்மனுதாரர் பொருளாதார நெருக்கடியில் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் திருமணம் 11.12.2016 அன்று நடந்தது. எங்களுக்கு ஜெனிமார்க்கஸ் என்ற மகன் 29.09.2017 அன்று பிறந்தார். எனது மனைவி திருமணத்திற்கு 4 மாதங்கள் பிறகு கர்ப்பம் ஆனார். எந்த மாதம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை.

என் மனைவி என் தாயாரை கவனித்துக்கொள்வதில்லை என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் 29.09.2017 ம் தேதி பிறந்துள்ளதால், எனது மனைவி திருமணமான 30 முதல் 60 நாட்களுக்குள்ளாக கர்ப்பம் ஆகியிருக்க வேண்டும் என்றால் சரிதான். அப்போது என் அம்மா உடல்நல பாதிப்புடன் இருந்தார் என்றால் சரிதான். என் மனைவி கர்ப்பமாக இருந்ததால், அவருக்கும் சில உடல் நல உபாதைகள் இருந்தன என்றால் சரிதான். என் மனைவி கர்ப்பமாக இருந்த சமயத்தில், அவருக்கு உதவியாக ஒரு நபர் தேவைப்பட்டது என்றால் தேவைப்பட்டது, என் அப்பா உடன் இருந்தார். நான் என் மனைவிக்கு அந்த காலக்கட்டத்தில் பணிவிடை செய்தேனா என்றால் செய்தேன், சமையல் மட்டும்தான் என் மனைவி செய்வார். அதுவும் சரியாக செய்யவில்லை என்பதால், என் அப்பா சமைத்தார். என் மனைவி கர்ப்பாக இருந்த காலத்தில் அவரை பார்த்துக்கொள்ள ஒரு ஆள் தேவை என்ற நிலையில், அவர் என் தாயாரை பராமரிக்கவில்லை என்று நான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் மனைவி கர்ப்பம் ஆன 7 ம் மாதத்தில் அவரது தாயார் வீட்டிற்கு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:34:30 +0530

போனார். மாதம் வருடம் ஞாபகம் இல்லை. குழந்தை பிறந்த 3 வது மாதத்தில் என் மனைவியையும், என் குழந்தையையும் எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தோம், மாதம் வருடம் ஞாபகம் இல்லை. என் மனைவி வீட்டிற்கு அழைத்துவரப்பட்ட 10 வது நாளே தாலியை கழட்டி வீசிவிட்டு சென்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடித்துவிட்டு வந்து அவரை அடித்து துன்புறுத்தியதால்தான் அவர் அவரது தாய் வீட்டிற்கு போனார் என்றால் சரியல்ல. அவர் வீசிவிட்டு சென்றதாக சொல்லும் தாலி, திருமணத்தின்போது நாங்கள் போட்டது. அவ்வாறு எந்த தேதியில் நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை.

நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என் மனைவிடன் சேர்ந்து வாழ வேண்டி IDOP No. 71/2023 என்ற மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் என் மனைவிக்கும் நடந்ததாக அந்த வழக்கில் நான் சொன்ன சில குடும்ப பிரச்சனைகளை பற்றி இந்த மனுவில் சொல்லவில்லை என்றால் சொன்னேனா, சொல்லவில்லையா என்று எனக்குத் தெரியவில்லை. அந்த வழக்கில் 11.02.2019 ம் தேதி என் மனைவி தாலியை கழட்டி வீசிவிட்டு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்னது போன்று, என் மனைவி அவர்களாக தாலியை கழட்டி வீசவில்லை என்றும், நான்தான் நான் போட்ட தாலியை நானே அறுத்துவிட்டு விரட்டிவிட்டேன் என்றாலும், நான் சொன்னது போன்று குழந்தையுடன் வீட்டிற்கு வந்த 10 வது நாள் என்பது சுமார் 2018 வருடம் ஜனவரி மாதம் முதல் மற்றும் 2 வது வாரம் ஆக இருக்கும் என்றால் சரிவர ஞாபகம் இல்லை.

அவ்வாறு சென்ற என் மனைவி எத்தனை மாதங்கள் அவரது பெற்றோர் வீட்டில் இருந்தார் என்றால் 9 மாதங்கள் இருந்தார். பின்பு நான் தான் போய் அழைத்து வந்தேனா என்றால் என் பெரியப்பா மற்றும் மாமாவுடன் சென்று அழைத்து வந்தேன். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் எந்த சாமியாரையும் அழைத்து வந்து தாலியை மீண்டும் கட்டவில்லை என்றும், நான்



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.02.07 17:34:33 +0530

பிடுங்கி கொண்ட பின்பு எதிர்மனுதாரர் மஞ்சள் கயிறை அணிந்து கொண்டார் என்றும், தற்போது வரை அதைதான் அணிந்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த தங்க தாலி செயின் தற்போது யாரிடம் உள்ளது என்றால் எதிர்மனுதாரரிடம்தான் உள்ளது.

இந்த வழக்கிலும், IDOP No. 71/2023 வழக்கிலும் நான் அணிவித்த தங்க தாலி எதிர்மனுதாரரிடம் உள்ள விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. 27.08.2021ம் தேதி எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களை வரவழைத்து சீர்வரிசை பொருட்களை எடுத்து சென்றுவிட்டார் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி இளையான்குடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் DVC No. 16/2023 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் நான் என் மனைவி மற்றும் மகனுக்கு மாதம் ரூ.6000 கொடுக்க வேண்டும் என்றும், சீர்வரிசை பொருட்களை திரும்ப கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவானது என்றால் சரிதான். அதன்பின்னர்தான் சீர் வரிசை பொருட்களை எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான்.

என் மாமாவும் என் பெரியப்பாவும் என் மனைவியை வீட்டிற்கு அழைத்து வந்த பின்னர், என் மனைவி அவரது உறவினர் வீட்டில் காதுகுத்து வைத்துள்ளதாகவும், அதற்கு போக வேண்டும் என்று என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல. அது போன்று என்னிடம் கேட்டார் என்றும், அதற்கு நான் போ என்றும் சொல்லவில்லை, போக வேண்டாம் என்றும் சொல்லவில்லை என்றும், அதனால் என் மனைவி அந்த விஷேசத்திற்கு சென்றுவிட்டு, இரண்டு நாட்கள் அவரது தயார் வீட்டில் தங்கிவிட்டு வந்ததார் என்றும், அதனால் நான் கோபித்துக்கொண்டு அவரிடம் எதுவும் பேசாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு என் மனைவியிடம் பேசாமலும், குழந்தைக்கு பால் வாங்குவதற்கு கூட காசு கொடுக்காமலும், என் மனைவியை வேலைக்காரி போல் வீட்டில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:34:36 +0530

இருக்கவேண்டும், இல்லை என்றால் கிளம்பி போ என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. அதன்பின்னர் நான் எதிர்மனுதாரரை என் வீட்டிற்கு அழைத்து வர எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

அதன்பின்தான் என் மனைவி இளையான்குடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் DVC No. 12/2022 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு Lok Adalath மூலம் தீர்க்கப்பட்டு நான் இனிமேல் பிரச்சனை எதுவும் செய்ய மாட்டேன் என்று சொல்லி என் மனைவியை வீட்டிற்கு அழைத்து வந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு அழைத்து வந்த பின்னர் எனது உறவினர் மோட்சம், லிடில் திரேசி, லிமாரோஸ், சாலோமன், அமலோர்பவம், சார்லஸ், ஜான்போஸ்கோ, சவரியம்மாள், இருதயமேரி ஆகியோர்கள் அந்தோணி மீது வழக்குவிட்டு எப்படி இங்கே வாழவருவாய் என்று சொல்லி என் மனைவியை திட்டி, அடித்து பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் அடித்தார்கள் என்றும், நான் அவர்களை கண்டிக்கவில்லை என்றும், அதனால் என் மனைவி மீண்டும் தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அவர்கள் பிரச்சனை எதுவும் செய்யவில்லை, என் மனைவி தானாக தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

IDOP No. 71/2023 வழக்கில் எனக்கு சாதகமாக Exparte உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு பெற்றபின்னர் என் மனைவியுடன் சேர்ந்து வாழ நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் அந்த உத்தரவை இளையான்குடி நீதிமன்றத்தில் கொடுத்தேன். நான் தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. 15.12.2023 ம் தேதி சேர்ந்து வாழ்வதற்கு IDOP No. 71/2023 வழக்கில் உத்தரவு பெற்ற பின்பு இந்த மனு தாக்கல் செய்யும் வரை என் மனைவியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இருந்தேன். என் மனைவியும் இன்றுவரை என்னுடன் சேர்ந்து வாழத்தான் விரும்புகிறார் என்றால் சரியல்ல. அதனால்தான் அவர் இந்த



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:34:39 +0530

மனுவினை தள்ளுபடி செய்து, சேர்ந்து வாழ உத்தரவு போடவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

பொதுவாக கிராமங்களில் மனைவி கோவித்துக்கொண்டு தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டால், கணவர் வீட்டினர்தான் சென்று சமாதானம் செய்து அழைத்து வருவார்கள் என்றால் எனக்குத் தெரியாது. நான் இந்த மனுவில் என் மனைவிக்கு எதிராக கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும், இந்த வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. எனக்கும் என் மனைவியுடன் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளது என்றும், ஆனால் என் உறவினர்கள் துர்போதனைகளை கேட்டு நான் சேர்ந்து வாழ மறுத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி இப்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் இதற்கு முன்னர் நடந்த வழக்குகளில் இது போல் அவர் சொல்லவில்லை. தற்போது அவ்வாறு இந்த வழக்கிற்காக சொல்கிறார். மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:34:42 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .